தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சென்னை, நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது, இதன் தொடர்ச்சியாக திருவள்ளூரில் உள்ள ஸ்ரீ நிகேதன் மேல்நிலைப் பள்ளியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் காணொளி காட்சி வாயிலாக நேரலையில் கலந்துக் கொண்டு முன்னிலையில் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், டி.ஜே.கோவிந்தராஜன், துரை சந்திரசேகரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தர் சுக்லா,கலால் உதவி ஆணையர்கணேசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் மோகனா, மாவட்ட கல்வி அலுவலர் தேன்மொழி, நகர் மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன் நகர் மன்ற துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

திருநின்றவூர் ஜெயா கல்லூரியில்

கலைஞர் மாணவ பத்திரிகையாளர் திட்டம் - விண்ணப்ப படிவம்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாணவ மாணவியர்களுக்கு வழங்கினார்!

திருவள்ளூர் ஆக 12

திருவள்ளூர் மத்திய மாவட்டம் இளைஞரணி சார்பில் ஆவடி சட்ட மன்ற தொகுதி உட்பட்ட திருநின்றவூர் ஜெயா கலை அறிவியல் கல்லூரியில் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியும் முரசொலி நாளிதழும் இணைந்து கலைஞர் மாணவ பத்திரிகையாளர் திட்டத்தில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கின்ற வகையில் விண்ணப்பம் படிவத்தை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் வழங்கி கல்லூரியில் உள்ள அறிவிப்பு பலகையில் படிவத்தை ஒட்டினார்

கல்லூரி மாணவர்களுடன் பேசுகையில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களும் கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் திராவிட மாடல் இதழில் வரலாற்றில் உங்களை இணைந்து கொள்ள ஒரு மகத்தான வாய்ப்பு

இத்திட்டத்தின் மூலம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெறுவதன் மூலம் முரசொலி மற்றும் கலைஞர் தொலைக்காட்சி போன்ற பெரு ஊடகங்களில் அவை சார்ந்த இணையதளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களிலும் செய்தியாளர்கள் புகைப்பட கலைஞர்கள் டிசைனர் எடிட்டர் ஒளிப்பதிவுகளாக ஓராண்டு பயிற்சி வழங்கி மாணவர் பத்திரிகையாளராகப் பயிற்சி பெறும்போது மதிப்பூதியமும் வழங்கப்படுகிறது அதுமட்டுமல்லாமல் திராவிடத்தால் வாழ்கிறோம், தமிழ் எங்கள் உயிருக்கு நேர், ஒன்றியத்தில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, திருப்பங்கள் ஏற்படுத்திய திராவிட அரசுகள், நூற்றாண்டு நாயகர் கலைஞர், எங்கள் ஊரில் திராவிட இயக்கம் திராவிட மாடல அரசு எல்லாருக்கும் எல்லாம் கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி ஆகிய தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில் ஆயிரம் சொற்களும் மிகாமல் கட்டுரை எழுதி கல்லூரி மாணவ மாணவிகள் சொந்த மூர்ச்சியாக இருக்க வேண்டும் இது பயிற்சியின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களை மாணவர் பத்திரிக்கையாளராக தேர்ந்தெடுக்கப் படுவார்கள் என தெரிவித்தார்

இந்நிகழ்ச்சியில் நகரக் கழகச் செயலாளர் தி.வை. இரவி, ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ், கல்லூரி முதல்வர் சுரேஷ், திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், ஏ.டி.பிரியா குமார், எஸ்.சதீஷ் குமார், புவனேஷ், மோதீஸ் ஜீத்து, ரீத்தீஸ், உள்பட பலர் உள்ளனர்

காஞ்சிபுரம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், தேசிய குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கியும் மற்றும் குடற்புழு நீக்க மாத்திரைகளை பள்ளி மாணவிகளுக்கு வழங்கும் நிகழ்வினை காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆகியோர் இணைந்து துவக்கி வைத்தார். உடன், மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட கே. ஆறுமுகம், பகுதி கழக செயலாளர்கள் கே. திலகர், மாநகராட்சி ஆணையர், இணை இயக்குநர், மக்கள் நலவாழ்வுத் துறை, மண்டலக் குழு உறுப்பினர் ஜி. சசிகலா, மாமன்ற உறுப்பினர்கள் ஜி. குமரன், பி. சங்கர், மாநகராட்சி சுகாதார அலுவலர், பள்ளி தலைமை ஆசிரியை மற்றும் ஏராளமான மாணவச் செல்வங்கள் கலந்துக் கொண்டனர்.

செ.யுவராஜ் ஏற்பாடு! தலைமை: ச.அற்புதராஜ்! முன்னிலை: ஆர்.டி.மதன்குமார்!

புழல் ஒன்றிய இளைஞர் அணி சார்பில் தெருமுனைக் கூட்டம்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்கினார்! எஸ்.கே.ஸ்ரீராம், கா.ஹேமநாதன் சிறப்புரை!

சென்னை, ஆக.12

முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின் படி மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, அவர்களின் ஆலோசனை படி சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் 10.8.2025 அன்று தீர்த்தகரையம்பட்டு திமுக அலுவலகம் அருகில் புழல் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் செ.யுவராஜ் ஏற்பாட்டில், புழல் ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவொற்றியூர் ஆர்.டி மதன்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜி.கே.இனியன் புழல் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஏ.டேவிட் நாவலன், யூ.பிரேம்குமார், ஆர்.ஐயப்பன், ம.குரளரசன், அ.மணிமாறன், சே.அஸ்வின் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்ட மன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்கள் கலந்து கொண்டு திமுக அரசின் சாதனைகளை விளக்கி 500க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில் தலைமை கழக பேச்சாளர் எஸ்.கே.ஸ்ரீராம் மற்றும் இளம் பேச்சாளர் கா.ஹேமநாதன் ஆகியோர் பங்கேற்று கலைஞர் ஆட்சி காலத்தில் தமிழக மக்களுக்கு செய்த திட்டங்கள் குறித்தும், திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை குறித்தும் விளக்க உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சி.எஸ். எஸ்.டி சீனிவாசன், கேபிள் த.வேல் கணேசன் மற்றும் புழல் ஒன்றிய திமுக நிர்வாகிகள் இ.பாஸ்கரன், ஆர். ஸ்டாலின், ஜெ.முருகன், நா.ஜெகதீசன் பெ. சரவணன், சாந்தி பாஸ்கரன், ஆர். செல்வமணி, மூ.ரமேஷ், ஏ. பிரேமலதா, பி.ராஜேந்திரன், ஏ.கஜபதி, டில்லி ரமேஷ், ஆர்.டி. தேவதாஸ், பி.சுரேஷ், ஏ.விஜயன், எஸ். அந்தோணி, தே.ரா. அருண் குமார், எஸ்.முருகன், ஏ. ஆனந்தன் என்.தேவானந்தம், இ.ஞானசேகரன், மல்லிகா ரவிச்சந்திரன், கே.கருணாநிதி, வழக்கறிஞர் திராவிட டில்லி, ஆர்.நெடுமாறன் எம். ஜி.சுந்தர்ராஜ், ஏ.ஜோதி, ஜி.தினேஷ், ஏ.டில்லிபாபு, எஸ்.ஜி.சாக்ரடீஸ் கராத்தே பிரகாஷ், டி. நெல்சன், ஏ. அபிமன்னன், கே.அருள், எம்.எத்திராஜ், பி.ரதியா, மார்ச்ஸ் மதனா, ஜெ.தங்கராஜ், ஆஷா கல்வி நாதன், பி.சிவகுமார் கே.எல்.என். லெனின் குமார், மணலி எஸ்.ஸ்டாலின், டி.கே. வினோத், எம்.ஜெகன், ஸ்ரீ. சரவணன், எம்.எஸ்.மணி கண்டன், ஷாம்கார்த்திக், மா.முரளி ஜெ.ஸ்ரீதர் ரா. ரவீந்தர், ச.சதீஷ், எர்ணாவூர் சதீஷ், ஆர்.எம்.மணி கண்டன், ரூபேஸ், டோம்னிக் சேவியர், மனோஜ், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு இளைஞர் அணி நிர்வாகிகள் ஜி.ஜே.மோசசஸ் டி. ஜெனிஸ்தாஸ், ஏ.ஆல்வின், சாமோன் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

'திருவள்ளூரில் போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு'

மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்

திருவள்ளூர் ஆக 12;-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சென்னை, நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் 'போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு' (Drug Free TamilNadu) மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது, இதன் தொடர்ச்சியாகதிருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூரில் உள்ள ஸ்ரீ நிகேதன் மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் காணொளி காட்சி வாயிலாக நேரலையில் கலந்துக் கொண்டு, முன்னிலையில் அனைவரும் போதை பழக்கத்திற்க்கு எதிரான உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இவ்வுறுதிமொழி நிகழ்ச்சியில் சுமார் 2000க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளை சேர்ந்த மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டு விழிப்புணர்வு அடைந்தனர். பின்னர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவியர்கள் செ நோ டு டரக்ஸ் (SAY NO TO DRUGS) என்ற வாசக வடிவில் நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் போதை எதிர்ப்பு மன்றத்தின் வாயிலாக போதைக்கு எதிராக சிறப்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக அரசு உயர்நிலைப்பள்ளி, இராமதண்டலம்., அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, வெள்ளியூர். கே.எல்.கே. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கும்மிடிபூண்டி. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பேரம்பாக்கம். DRBCCC இந்து மேல்நிலைப்பள்ளி, திருவள்ளூர். செயின்ட் ஆனிஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி. ஸ்ரீ சந்திரபிரபு ஜெயின் கல்லூரி, மீஞ்சூர். மகாலட்சுமி மகளிர் கல்லூரி, பருத்திப்பட்டு. S.A. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவேற்காடு. திருமுருகன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொசவன்பாளையம். DRBCCC இந்து கல்லூரி, பட்டாபிராம். ஸ்ரீதேவி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொன்னேரி. ஸ்ரீ நிகேதன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவியர்கள் பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவியர்கள் நடத்திய போதைக்கு எதிராக விழிப்புணர்வு நாடகத்தை பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர்கள் வி. ஜி.ராஜேந்திரன் டி.ஜே. கோவிந்தராஜன், துரை சந்திரசேகரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தர் சுக்லா, உதவி ஆணையர் கணேசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மோகனா, மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) தேன்மொழி, நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர்கள் ஹரிகிருஷ்ணன், கூழுர் எம்.ராஜேந்திரன், மோ.ரமேஷ், எஸ்.மகாலிங்கம், ப.ச.கமலேஷ், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

ஏசியா சர்வதேச கடல் அலை சறுக்குப் போட்டி நிறைவு விழா – பரிசுகள் வழங்க இன்று வருகை தரும்

துணை முதல்வருக்கு - மாமல்லபுரம் நகரக் கழகம் சார்பில் வரவேற்பு!

நகரச் செயலாளர் வெ.விஸ்வநாதன் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

மாமல்லபுரம், ஆக. 12-

ஏசியா சர்வதேச கடல் அலை சறுக்குப் போட்டி நிறைவு விழா மற்றும் வீரர்களுக்கு பரிசுகளை வழங்க இன்று மாமல்லபுரம் வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மாமல்லபுரம் நகரக் கழகம் சார்பில் நகரக் கழகச் செயலாளர் வெ.விசுவநாதன் தலைமையில் உற்சாக வரவேற்பளிக்கப் படுகிறது.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஏசியா சர்வதேச கடல் அலை சறுக்கு போட்டி நிறைவு விழா மற்றும் வீரர்களுக்கு பரிசுகளை வழங்க மாமல்லபுரம் நகரத்திற்கு வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மாமல்லபுரம் நகர தி.மு.க. சார்பில் இன்று (12.08.2025 - செவ்வாய்க் கிழமை) மாலை 3.30 மணி அளவில், இ.சி.ஆர். பைபாஸ் மாமல்லன் சிலை அருகிலிருந்து, எனது (நகர கழக செயலாளர் வெ.விஸ்வ நாதன்) தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இதில் நகரக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு அறிக்கையில் இந்நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை மேற்கு மாவட்டக் கழக

ஆதிதிராவிடர் நலக்குழு பகுதி கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் இ.இளம் பாரதி அறிக்கை!

சென்னை, ஆக.12-

சென்னை மேற்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் இ.இளம் பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பாக பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள் அறிமுக மற்றும் ஆலோசனைக் கூட்டம் 13.08.2025, புதன்கிழமை அன்று மாலை 6.00 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழகச் செயலாளர் நே. சிற்றரசு தலைமையிலும், பகுதி செயலாளர்கள் ந. ராமலிங்கம், ச. பரமசிவம், ஏ.ஆர்.பி.எம். காமராஜ், எஸ். மதன்மோகன், ம.ப. அன்புதுரை, வினோத் லோயுதும் ஆகியோரின் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

மாவட்டத் தலைவர், மாவட்டத் துணைத் தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு இ.இளம்பாரதி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

ம.குறளரசன் ஏற்பாடு! தலைமை: ச.அற்புதராஜ்!

புழல் ஒன்றிய இளைஞர் அணி சார்பில் கலைஞர் நினைவு நாள்!

ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் நல உதவிகள் வழங்கினர்!

சென்னை, ஆக.12-

உலகத்தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர் - ஓய்வறியாச் சூரியன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்நினைவுநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞர் அணி சார்பில்,புழல் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.குறளரசன் ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, அறிவுறுத்தலின்படி, புழல் ஒன்றிய கழக பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் கிராண்ட்லைன் ஊராட்சியில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மரியாதை செலுத்தி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மரியாதை செலுத்தி தூய்மை பணியாளர்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டது. இதில் மா.மணி, செ.யுவராஜ், யு.பிரேம்குமார், ஐயப்பன், ஏ.மணிமாறன், ஏ.வினோத், பொன் நடராஜ், மனோதீபன், லெனின், மணி, மோகன், விநாயகம், ஆர்.அதியமான், எஸ்.இளங்கோவன், எம். முகேஷ்கண்ணன், எஸ்.சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க.சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு தலைவரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி வட்ட கழகம் மற்றும் அணிகளின் சார்பில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு எம்.சி, தொகுதி மேற்பார்வையாளர் டாக்டர்.ப.மீ.யாழினி ஆகியோர் பொது மக்களுக்கு உணவு வழங்கினர். நிகழ்ச்சி ஏற்பாடினை இலக்கிய அணி பகுதி அமைப்பாளர் செ.பிரேம்குமார் செய்திருந்தார். உடன் வட்ட கழக செயலாளர் தி. தயாளன், பகுதி அவை தலைவர் எம்.தில்லை குமார், கிருஷ்ணன்,விஸ்வநாதன்,முரளிதரன், அன்புக்கரசி,ரவி, மணிவண்ணன், ராஜா,செல்வமணி, மகேந்திரன்,முனீஸ் தயாநிதி. காண்டீபன், சந்தோஷ், அறிவழகன், புவனேஸ்வரி உள்ளிட்ட அனைத்து கழகத்தினர் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞர் அணி சார்பில் புழல் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.குறளரசன் ஏற்பாட்டில் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, அறிவுறுத்தலின்படி, புழல் ஒன்றிய கழக பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் கிராண்ட்லைன் ஊராட்சியில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மரியாதை செலுத்தி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மரியாதை செலுத்தி தூய்மை பணியாளர்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டது. இதில் மா.மணி, செ.யுவராஜ், யு.பிரேம்குமார், ஐயப்பன், ஏ.மணிமாறன், ஏ.வினோத், பொன் நடராஜ், மனோதீபன், லெனின், மணி, மோகன், விநாயகம், ஆர்.அதியமான், எஸ்.இளங்கோவன், எம். முகேஷ்கண்ணன், எஸ்.சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

"உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

இன்று (12.08.2025) 6 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை, ஆக 12-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் இன்று (12.08.2025) தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு 47ல் கொருக்குப்பேட்டை, ஏ.இ.எம். பள்ளி மைதானம், இராயபுரம் மண்டலம், வார்டு 56ல் பிரகாசம் சாலையில் உள்ள ஹையாத் மஹால், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 67ல் திரு.வி.க. நகர் காமராஜர் திருமண மண்டபம், அண்ணா நகர் மண்டலம், வார்டு100ல் டி.பி. சத்திரம் பிரதான சாலையில் அண்ணா சமுதாயக் கூடம், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு136ல் சாலிகிராமம், 80 அடி சாலையில் உள்ள சமுதாயக் கூடம், பெருங்குடி மண்டலம், வார்டு186ல் புழுதிவாக்கம் பிரதான சாலை, சுமங்கலி திருமண மண்டபம் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஸ்ரீ சரவணன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாவது நினைவு நாளை ஒட்டி அவருடைய திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஏழை எளியவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் முன்னிலை வகித்தார். இதில் சி.எஸ்.எஸ்.டி. சீனிவாசன், ஆர்.தினேஷ்குமார், எஸ்.ஆர்.மலைராஜ், எச்.ஜெகன், ஜெ.ஆர்.டி.சேகர், ச.சதீஷ் மனோஜ் (எ) தமிழ்மாறன், ஆர்.வரதன், கோபி, டி.கே. சிவசுரியா, பி.கதிர்வேல், கே.ஏகாம்பரம், என்.பாலகிருஷ்ணன், வி.மணிகண்டன், டி.செல்வகுமார், வி. பரமசிவம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.